**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06022021-4422

Volume: 6

Issue: 2

Month: October

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 09.07.2021

Accepted: 27.08.2021

Published: 01.10.2021

Citation:
Pushparani, T. "Vzhiyerkum Peyarkalum Vzhiyela Peyarkalum." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 2, 2021, pp. 152–57.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i2.4422

*Corresponding Author:
pushpadhanyu@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Vzhiyerkum Peyarkalum Vzhiyela Peyarkalum

**Dr. T. Pushparani**
*Assistant Professor, Department of Tamil Literature*
*Nallamuthukkaundar Mahalingam College, Pollachi, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0003-3250-5356

**Abstract -** 'Delivering' means 'calling'. The names that can come in the meaning of this call are called calling names. Exclamation points refer to the forwarding of the person or object belonging to the name. There are some rules for accepting nouns 'vili' in Tamil language. It is easy to call someone by name without any change in the name when pointing to the name in the meaning of 'offering'. When interpreted, it often sounds like the final sound of the name. Calling someone a little farther away should definitely make the final sound louder. Therefore, the 'syllable' or 'syllabic syllable' in the name can be stretched to the same level as the syllable or, if necessary, easily extended to include a syllable. Finally, vowel words and consonant words require different methods. It also requires different methods that are compatible with calling someone far away and calling someone nearby. Many other grammar and linguistic texts, including the Nannul, beginning with Tolkappiyam, the first book in the Tamil language, have recorded the grammar of names that have traditionally evoked such rules, with changes over time. This is what we call 'vilimarapu'. The purpose of this paper is to document the changes that have taken place between the two grammatical texts, the Tolkappiyam and the Nannul, with evidence of the present state of affairs, as well as to point to the messages of such grammar.

**Keywords:** Vzhithal, Vzhimarabu, Tolkappiyam, Nannul, syntax, nickname

**References**

1. Nufman, M.A. *Adipadai Tamil Elakanam*, Puthanatham. Adayalam Pathipagam.
2. Sivalinganar, A. *Tamil Elakana Unarvugal*, Pondicherry, Kapilar Pathipagam
3. Elampooranar Urai, Tolkappiyam, Sharda Pathipagam, Solathigaram.
4. Seeni Naina Mohammad, S. *Nalla Tamil Elakanam*, Puthanatham, Adayalam Pathipagam.
5. Elavarasu, *Soma, Urai*, Nanool, Solathigaram, Raiyapet, Chennai, Arivu Pathipagam.

# விளியேற்கும் பெயர்களும் விளியேலாப் பெயர்களும்

***முனைவர் த. புஷ்பராணி***
உதவிப் பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
பொள்ளாச்சி, தமிழ் நாடு, இந்தியா


***ஆய்வுச் சுருக்கம்***
*"விளித்தல்" என்றால் "அழைத்தல்" என்று பொருள். அழைத்தல் பொருளில் வரக் கூடிய பெயர்கள் விளியேற்கும் பெயர்கள் எனப்படுகின்றன. விளியேற்கும் பெயர்கள், பெயருக்கு உரிய நபரையோ, பொருளையோ முன்னோக்கி விளிப்பதைக் குறிக்கிறது. தமிழ் மொழியில் உள்ள பெயர்ச்சொற்கள் "விளி" ஏற்பதற்கென்று சில விதிமுறைகள் உள்ளன. "விளித்தல்" பொருளில் ஒருவரைப் பெயரைச்சுட்டி அழைக்கும்போது பெயரில் எவ்வித மாற்றமும் இன்றி அழைத்தல் எளிதானது அன்று. விளிக்கப்படும்போது, பெரும்பாலும் பெயரின் இறுதி ஒலியை நீட்டி ஒலிக்க நேரும். அதிலும் சிறிது தொலைவில் உள்ளவரை அழைப்பதெனில் உறுதியாக இறுதி ஒலியை நீட்டியே ஆகவேண்டும். ஆதலால், பெயரில் உள்ள "ஈற்றெழுத்து" அல்லது "ஈற்றயல் எழுத்து" ஒலியை உள்ளவாறே நீட்டியோ, தேவைப்படுமாயின் நீட்டி ஒலிக்க எளிதாக ஓர் எழுத்தைச் சேர்த்தோ ஒலிக்க நேரிடும். இறுதியில் உயிரெழுத்தைக் கொண்ட சொற்களுக்கும் மெய்யெழுத்தைக் கொண்ட சொற்களுக்கும் பொருத்தமான வெவ்வேறு முறைகள் தேவைப்படுகின்றன. அதிலும் தொலைவில் உள்ளவரை அழைப்பதற்கும் அண்மையில் உள்ளவரை அழைப்பதற்கும் பொருந்தக் கூடியதான வெவ்வேறு முறைகளும் தேவைப்படுகின்றன. இவ்வாறான விதிகளை மரபாகக் கொண்டு விளியேற்கும் பெயர்களின் இலக்கணத்தைத் தமிழ் மொழியின் முதல் நூலான தொல்காப்பியம் தொடங்கி நன்னூல் உள்ளிட்ட ஏனைய பல இலக்கண நூல்களும் மொழியியல் நூல்களும் காலந்தோறும் ஏற்பட்டு வரும் மாற்றங்களுடன் பதிவுசெய்துள்ளன. இதனையே "விளிமரபு" என்கிறோம். இத்தகைய விளிமரபு பற்றி தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இரு இலக்கண நூல்கள் கூறியுள்ள செய்திகளைச் சான்றுகளுடன் சுட்டி தற்கால நிலையையும் கூறி இவைகளுக்கு இடையே காலந்தோறும் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பதிவுசெய்வதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.*

***முக்கியச்சொற்கள்:*** *விளித்தல், விளிமரபு, தொல்காப்பியம், நன்னூல், தொடரியல், விரவுப்பெயர்*

## வேற்றுமை எண்ணிக்கை

தொல்காப்பியத்தின்படி வேற்றுமைகள் எட்டு என்பதும் எட்டாவதான வேற்றுமையே விளிவேற்றுமை என்பதும் அறியப்படுகின்றது. முதல் வேற்றுமை தொடங்கி ஏழாம் வேற்றுமை முடிய உள்ள அனைத்தையும் ஒரே இயலில் சுட்டிய தொல்காப்பியர் விளிவேற்றுமைக்கு என்றே தனியானதொரு இயல் அமைத்திருப்பதனைக் கொண்டே விளிவேற்றுமையின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ள முடிகின்றது. ஆங்கிலத்தில் விளிவேற்றுமைக்கு "Vocative case" என்று பெயர். ஏனைய வேற்றுமைகளுக்கு விளிவேற்றுமைக்குமான அடிப்படையான வேறுபாடு "தொடரியல்" வேறுபாடு ஆகும். அதாவது, ஏனைய உருபுகள் வாக்கியத்துக்குள் எழுவாய், செயப்படுபொருள் போல் வாக்கிய உறுப்புக்களாக அமைய இது வெளியே அமைகிறது.

**சான்று**




இதில், தம்பி என்ற பெயர்ச்சொல்லானது விளிபெற்றுள்ளது. இச்சொல் வாக்கியத்தில் இருந்து தனியே உள்ளதைக் காணமுடிகின்றது.

### தனியுருபு இல்லாமை

விளிவேற்றுமைக்குத் தனி உருபு இல்லை. பெயர்ச்சொல்லின் ஈறுகெட்டும் திரிந்தும் பிற ஒலிகள் ஈற்றில் இணைந்தும் விளிவேற்றுமை வடிவங்கள் அமைகின்றன. ஏனைய வேற்றுமை வடிவங்கள் ஒரே வகையாக அமைய, விளிவேற்றுமை வடிவங்கள்பல்வேறு வடிவங்களாக அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது. அதாவது விளியின் வடிவத்தை இரண்டாகப் பகுக்கலாம். அவை: 1. இயல்பு, 2. திரிதல்.

பேசுவோர் படர்க்கை இடத்திற்கு உரியவரை முன்னிலைப்படுத்தி அழைத்துப் பேசுவதே விளிவேற்றுமை எனப்படும்.

**சான்று:**

செழியன், தாமரை, மாடு, மயில், மக்கள் மேற்கண்ட சான்றுகளில் "மக்கள்" என்ற ஒரு பெயர்ச்சொல்லை மட்டும் எடுத்துக் கொள்ளலாம். அதாவது

மக்கள் = படர்க்கைப் பெயர்.
விளியேற்கும் போது,
மக்கள் ⇨ மக்காள்! ⇨ மக்காள்! ⇨ மக்கா! ⇨ மக்களே!

என்பனவாக மாறி, "மக்களாகிய நீங்கள்" என்ற பொருளில் படர்க்கை முன்னிலை ஆகிறது.

### விளியில் பெயர்கள்

"விரவுப்பெயர்" என்றால் "காரணப்பெயர்", அதாவது கலந்துவருதல். அப்பெயர்கள் உயர்திணை, அல்லது அஃறிணையில் எந்த வினைமுற்றுடன் அல்லது எந்தப் பாலுடன் பொருந்தி வருகிறதோ அத்திணைக்கு உரியதாகச் சுட்டப்படும். இதையே, நன்னூலார் "விரவுத்திணை" என்று கூறாமல் "பொதுத்திணை" என்று சுட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

விளிமரபானது, விளியேற்கும் பெயர்கள் விளியேலாப்பெயர்கள் ஆகிய இருவகைப் பெயர்கள் பற்றி விளக்குகின்றது. விளிவேற்றுமையின் பொது விலக்கணத்தை,

**"விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு**
**தெளியத் தோன்றும் இயற்கைய என்ப"**
**(தொல்.சொல்.இளம்.நூ.115)**

என்ற நூற்பா அடிகள் அறிவிக்கின்றன. மேற்கண்ட அடிகளில் "கொள்ளும் பெயர்" என்று உள்ளதின் வாயிலாக "கொள்ளாப் பெயர்களும் உண்டு என்பதும் விளங்குகின்றது. இதுவே, "உய்த்துணர்தல்" உத்தி எனப்படும். "விளியெனப்படுவது" என்று கூறாமல் "விளியெனப் படுப" என்று பன்மையில் கூறி உள்ளதால், "பெயர்ச்சொல்லின் இறுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றங்கள் நிகழ்ந்து "விளியேற்கும்", என்பதும் பெறப்படுகிறது. இவ்வகையில் தொல்காப்பியம், நன்னூல் தற்காலவழக்கு இடையே வேறுபாடு உள்ளதை,

விளியேற்கும் பெயர்கள் அடையும் மாற்றம்

| தொல்காப்பியம்(4) | நன்னூல்(5) | தற்கால வழக்கு(5) |
|---|---|---|
| 1. ஈறுதிரிதல் | 1. ஈறுதிரிதல் | 1. ஈறுதிரிதல் |
| 2. ஈற்றயல் நீடல் | 2. ஈற்றயல் நீடல் | 2. ஈறுகெடுதல் |
| 3. பிறிதுவந்தடைதல் | 3. பிறிது வந்தடைதல் | 3. ஈற்றெழுத்துமிகுதல் |
| 4. இயல்பாதல் | 4. இயல்பாதல் | 4. இயல்பாதல் |
| 5. ஈறுகெடுதல் | 5. ஈற்றயல் திரிதல் | |

என்பதைக் கொண்டு தெளிவுற முடியும்.

தொல்காப்பியத்திற்கான சேனாவரையர், வெள்ளைவாரணர் உரையிலிருந்தே விளியேற்கும் பெயர்கள், விளியேலாப் பெயர்கள் ஆகியவை அடங்கிய விளிவேற்றுமைக்கான வரையறையை நன்னூலார் தமது நூற்பா அடிகளாக அமைத்துள்ளார். இதற்குச் சான்றாக,

**"படர்க்கை யோரைத்**
***தன்முகமாகத் தான்அழைப் பதுவே"***

**(நன்.சொல்.நூ. 303)**

என்பதைக் கூறமுடியும். தொல்காப்பியர் விளிவேற்றுமைக்கான வரையறையைத் தனியே சுட்டவில்லை. இதன் வாயிலாக, அக்காலத்தில், நூலாசிரியர் கூற விழைந்ததை மாறுபாடின்றிக்கூறும் திறனுடைய உரையாசிரியர்கள் இருந்துள்ளமையும், உரையாசிரியர் கூற்றுக்களையும் பிற்கால இலக்கண நூலாசிரியர்கள் பின்பற்றி நூல் வகுத்துள்ள பாங்கினையும் அறியமுடிகின்றது. இதனைக் காலமாற்றத்திற்கான சான்றாகவும் கொள்ளமுடியும்.

## விளியேற்கும் பெயர்கள் - வகைப்பாடு

விளியேற்கும் பெயர்களை வகைப்படுத்திக் கூறுவதில் தொல்காப்பியம், நன்னூல், தற்கால இலக்கண நூல்களிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதாவது தொல்காப்பியம்,

1. உயர்திணைப்பெயர் விளியேற்றல் (நூ. 3-6 8-11, 13-19 21-24 21-31)
2. அஃறிணைப் பெயர் விளியேற்றல் (நூ-34)
3. விரவுப்பெயர் விளியேற்றல் (நூ.33)

எனப் பாகுபடுத்தி இவைகளிலும் உயிர் - மெய், அளபெடை, உறவுமுறை, தொழிற்பெயர் என்றும் தனித்தனியாகச் சான்றுகளுடன், சுட்டிச்செல்கின்றது. நன்னூல் இவ்வாறின்றி,

**"இ உ ஊ வோடு ஐ ஓ ன ள ர ல**
***யவ்ஈற்று உயர்திணை ஓரஅல் இவற்றொடு***
**ணஃகான் ஆஈறு ஆகும் பொதுப்பெயர்**
***ஞ ந ஒ ழி அனைத்து அஃறிணை விளிப்பன"***

**(நன்.சொ.நூ.304)**

என்ற ஒரு நூற்பாவின் அடிகளிலேயே அனைத்துச் செய்திகளையும் சுட்டியுள்ளமை "தொகுத்துக் கூறல்" என்ற உத்தி அடிப்படையில் ஆகும்.

தற்கால இலக்கண நூல்களில் விளிவேற்றுமை பலவாறான வகைகளில் விளக்கப்பட்டுள்ளது. உருபுநிலை, விளிபெறும் சூழல்சார்ந்து கூறியுள்ளதை,

"முருகன் வா! என வரும் பெயரிறுதி பலவாறு திரிந்து விளிக்கப்படும். சான்று முருக, முருகா, முருகனே, முருகே. இப்படிப் பலவாறான திரிபுகள்" (ஆ.சிவலிங்கனார். தமிழ் இலக்கண உணர்வுகள், ப.எ.100) என்றதன் வாயிலாகவும், மொழியியல் சார்ந்தும் மரபிலக்கணம் சார்ந்தும் விளிமரபினைத் தெளிவுறக் கூறித் தொடர்ந்து

தற்கால வழக்கினையும் கூட்டியுள்ளது. “அடிப்படைத் தமிழ் இலக்கணம்” என்ற இக்கால இலக்கண நூல் அதில் இடம்பெற்றுள்ள, “வினைக்கும் விளிக்கப்படும் பெயருக்கும் இடையே நேரடி உறவு இல்லை. இதனால், தற்கால மொழியியலாளர் சிலர் விளி வேற்றுமையை ஒரு வேற்றுமையாகக் கொள்வதில்லை. நீ, நான், அவன் முதலிய மூவிடப் பெயர்கள் விளிக்கப்படுகின்றன.” (எம்.ஏ. நுஃமான், அடிப்படைத் தமிழ் இலக்கணம், ப.எ. 109) என்ற செய்தியின் வழி விளிவேற்றுமையை ஒரு வேற்றுமை உருபாக ஏற்றுக்கொள்ளாத இலக்கண, மொழியியல் ஆசிரியர்கள் பாவலரேறு பாலசுந்தரனார் தொடங்கி தற்கால ஆசிரியர்கள்வரை தொடர்வதையும் எண்ண வேண்டியுள்ளது.

விளிப்பெயர்ப்பாகுபாட்டினைப் பிற்கால மொழியியல் வல்லுநர்கள் இட அடிப்படையிலான விளியேற்கும் பெயர்கள் மரியாதை அடிப்படையிலான விளியேற்கும் பெயர்கள் என இரண்டாகப் பாகுபடுத்தி உள்ளனர். இதில் முதல்வகை அதன் பிரிவுகள் ஆகியவற்றை மட்டுமே மரபிலக்கணங்கள் பதிவுசெய்துள்ளன. அதிலும் இட அடிப்படையை அண்மை விளி, சேய்மை விளி என்றும் மரியாதை அடிப்படையிலான பகுப்பை “மதிப்புடைய விளி” “மதிப்பில்லா விளி” என்பனவாகப் பகுத்துள்ளமை மரபு இலக்கணங்களில் சுட்டடப்படவில்லை.

**விளியேற்கும் பெயர்கள்**



திணைகள், உயிர் மெய் என்பனவாகப் பாகுபடுத்தி குறிப்பிட்டுள்ளார்.

எட்டாம் வேற்றுமைக்கு உருபு இல்லை. இதனை விளிவேற்றுமை என்றும் வழங்குவர்.

கந்தா! இங்கே வா! அண்ணா நீ வாழ்க! மன்ன, உன் புகழ் ஓங்குக! கோதாய்! உன் பாடல் நன்ற அரசனே! உன் ஆட்சி சிறப்புறுக! கண்ணன் அங்கே நில்! மக்காள் வருக!

| அண்மை விளி | சேய்மை விளி |
|---|---|
| மாதவன்! எழுந்து வா | கண்ணா! போகாதே நில் |
| மாதவ, நீ நல்லவன் | யாவோ! அங்கேயே இருங்கள் |

### விளியேலாப்பெயர்கள்

1. தன்மைப்பெயர்கள் - நான், யான், யாம், நாங்கள், யாங்கள்
2. முன்னிலைப் பெயர்கள் - நீ, நீர், நீயிர், நீவிர், நீங்கள்
3. கிளைப்பெயர்கள் - -----------
4. சுட்டுப்பெயர்கள் - அவன், அவள், அவர்கள், அது, அவை, இவன், இவள், இவர்கள், இது, இவை.
5. வினாப்பெயர்கள் - எவன், எவள், எவர், எது
6. பொதுப்பெயர்கள் - தான், தாம்
7. “பிறன்” முதலிவை - பிறன், பிறள், பிறர், பிறிது, பிற.

### தொகுப்புரை

1. விளியேற்கும் பெயர்கள் கால ஓட்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை எடுத்துக்காட்டுகிறது. விளிவேற்றுமையை ஒரு வேற்றுமையாகக் கருதாத போக்கும் உண்டு.
2. மதிப்புடைய விளி, மதிப்பிலா விளி என விளி வேற்றுமை நோக்கும் போக்கு வந்துவிட்டது.
3. விளியேற்கும் பெயர்கள் இயல்பாதல்,

*திரிதல் போன்ற மாற்றங்களை அடை கின்றன.*

4. *பொருளை வேறுபடுத்திக் காட்டுவதில் பிற வேற்றுமைகளுக்கு உள்ள தன்மை விளிவேற்றுமைக்கு உண்டு என்பதை மறுப்பதற்கில்லை.*

**துணை நூற்பட்டியல்**


1. நுஃமான், எம்.ஏ. *அடிப்படைத் தமிழ் இலக்கணம்.* புத்தாநத்தம், அடையாளம் பதிப்பகம்.
2. சிவலிங்கனார், ஆ. *தமிழ் இலக்கணம் உணர்வுகள்.* புதுச்சேரி, கபிலர் பதிப்பகம்
3. இளம்புரணார் உரை. *தொல்காப்பியம் - சொல்லதிகாரம்,* சாரதா பதிப்பகம்.
4. சீனி, செ. நைனா முகம்மது. *நல்லதமிழ் இலக்கணம்.* புத்தாநத்தம், அடையாளம் பதிப்பகம்.
5. பேரா. சோம. இளவரசு உரை நன்னூல், சொல்லதிகாரம். இராயப்பேட்டை சென்னை, அறிவுப்பதிப்பகம்.